DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST (POA) ACT 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 13/2024**

அ.சா.9

Prosecution witness

(Witness examined through video conferencing in accordance with Madras High Court video conferencing Rules 2020)

| | | | |
|---|---|---|---|
| Name: | திரு. சின்னகண்ணு | Caste: | |
| Father's Name: | நாச்சியப்பன் | Calling: | காவல்துணைக் கண்காணிப்பாளர், ஓய்வு |
| Village: | 3/632, செந்தில்குமரன் நகர், சர்வேயர் காலனி, மதுரை -7 | Religion: | |
| Taluk: | மதுரை வடக்கு | Age: | 60 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 02.02.2026.

( எதிரி ஆஜர்.)

<u>முதல் விசாரணை</u>

நான் கடந்த 31.01.2025ம் தேதி முதுகுளத்தூர் உட்கோட்ட காவல்துணைக் கண்காணிப்பாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று மதுரையில் வசித்து வருகிறேன். கடந்த 2024ம் வருடம் இராமநாதபுரம் மாவட்ட முதுகுளத்தூர் உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளராக பணிபுரிந்தபோது இளம்செம்பூர் காவல்நிலைய கு.எண். 23/2024 சட்டப்பிரிவுகள் 294(b) IPC and sec 3(1)(r), 3(1)(s) of SC/ST (POA) Act வழக்கினை புலன் விசாரணை மேற்கொள்ள இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தனது செயல்முறை ஆணை எண். C.No. 07/SJ&HR/RMD/2024, Dated: 04.03.2024ன் மூலம் புலன் விசாரணை அதிகாரியாக நியமித்தார். அந்த உத்தரவு **அ.சா.ஆ.4**. நான் 05.03.2024ம் தேதி காலை 7.00 மணியளவில் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.02 16:08:21 +0530

சம்பவ இடமான மூன்றாம் கரிசல்குளம் கண்மாய் கரை அருகே உள்ள எதிரி வெள்ளைச்சாமி என்பவருக்கு சொந்தமான வயலுக்கு சென்று சம்பவ இடத்தை சாட்சிகள் முருகையா மற்றும் இராமச்சந்திரன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர், வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளிடம் பார்வை மகசரில் கையெழுத்து பெற்றேன். நான் தயார் செய்த வரைபடம் **அ.சா.ஆ.5.** அன்றைய தினமே புகார் கொடுத்த சாட்சி மனோரஞ்சனி மற்றும் சம்பவத்தை பார்த்ததாக சொல்லப்பட்ட சாட்சிகள் செல்வி, மருதகுமார், அரியாள், முருகேஷ்வரி, பகலவள்ளி மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான முருகையா, இராமச்சந்திரன் ஆகியோர்களை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களை தனித்தனியாக பதிவு செய்தேன். அன்றைய தினமே புகார் கொடுத்த மனோரஞ்சனி மற்றும் எதிரி வெள்ளைச்சாமி ஆகியோர்களுக்கு சாதிச்சான்றிதழ் வழங்கும்படி முதுகுளத்தூர் வட்டாட்சியர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். 30.03.2024 ம் தேதி புகார்தாரர் மனோரஞ்சனிக்கு சாதிச்சான்றிதழ் வழங்கிய வட்டாட்சியர் சடையாண்டி அவர்களையும், எதிரிக்கு சாதிச்சான்றிதழ் வழங்கிய மண்டல துணை வட்டாட்சியர் மாரிமுத்து அவர்களையும் விசாரித்து சாதிச்சான்றிதழ் பெற்று அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தேன். மனோரஞ்சனிக்கு வழங்கப்பட்ட சாதிச்சான்றிதழ் அ.சா.ஆ.6. எதிரிக்கு வழங்கப்பட்ட சாதிச்சான்றிதழ் அ.சா.ஆ.7. அன்றைய தினமே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த இளம்செம்பூர் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் முனியாண்டி அவர்களை விசாரித்து அவரின் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். முதுகுளத்தூர் வட்டாட்சியர் புகார்தாரர் மனோரஞ்சனி பட்டியல் இனத்தை சேர்ந்த

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.02 16:08:26 +0530

தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர் என்றும் எதிரி பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்த யாதவர் சமூகத்தை சேர்ந்தவர் என சான்று வழங்கியதால் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(b) IPC and sec 3(1)(r), 3(1)(s) of SC/ST (POA) Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது உட்கோட்ட காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடக்கும் சம்பவங்கள் குறித்து என் பார்வைக்கு கொண்டு வரப்படும் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவம் குறித்து முதன்முதலாக என் பார்வைக்கு எப்போது கொண்டு வரப்பட்டது என்றால் இளம்செம்பூர் காவல்நிலைய ஆய்வாளர் முனியாண்டி வழக்கு பதிவு செய்தபிறகு என் கவனத்திற்கு கொண்டு வந்தார். பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வழக்குகளை பொறுத்தவரை விசாரணை அதிகாரி என்பதால் சம்பவம் நடந்தவுடன் என் பார்வைக்கு கொண்டு வரப்படும் என்றால் சரிதான். இவ்வழக்கில் சம்பவம் நடைபெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன்தான் சார்பு ஆய்வாளர் என் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட நேரத்திலும், வழக்கு பதிவு செய்ததாக சொல்லப்பட்ட நேரத்திலும் எதிரி மருத்துவமனையில் இருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள நபர்கள் அனைவரும் மகள் மற்றும் அப்பா, அம்மா என்றும் அவர்களால் எதிரி தாக்கப்பட்டு மருத்துவமனையில் இருந்த விவரத்தை சார்பு ஆய்வாளர் உங்களுக்கு தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. மருத்துவமனையில் எதிரி 3 நாட்கள் இருந்த விவரம்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.02 16:08:31 +0530

என் கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை என்றால் சரிதான். எதிரி அ.சா.1 முதல் 3 சாட்சிகளால் தாக்கப்பட்டும் அ.சா.1 முதல் 3 சாட்சிகளால் எதிரி திட்டப்பட்டும் அதுசம்பந்தமாக எதிரி இளம்செம்பூர் காவல்நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் கு.எண். 22/2024 என அ.சா.1 முதல் 3 சாட்சிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். எதிரி புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்தபோதுதான் இவ்வழக்கின் புகார்தாரர் ஒரு நாள் கழித்து எதிரி மீது புகார் கொடுத்தார் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடமானது எதிரி வசிக்கும் கன்டிலான் கிராமத்தை ஒட்டி அமைந்துள்ள இடம் என்றால் சரிதான். அ.சா.1 வசிக்கும் விலாத்திக்கூட்டம் கிராமத்திற்கும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் இடையே 2 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடம் வயல்காடு என்பதால் ஆட்கள் நடமாட்டம் இருக்காது என்றால் சரிதான். அ.சா.2 மனோரஞ்சனியின் அம்மா, அ.சா.3 மனோரஞ்சனியின் அப்பா, அ.சா.4 மனோரஞ்சனியின் பாட்டி, அ.சா.5 மனோரஞ்சனியின் அத்தை, அ.சா.6 மனோரஞ்சனியின் சித்தப்பா, அ.சா.7 மனோரஞ்சனியின் பெரியப்பா என்றும் அவர்கள் அனைவரும் இரத்த உறவு உள்ளவர்கள் என்றால் சரிதான். நான் அந்த ஊரை சேர்ந்த வெளிநபர்களை சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான், யாரும் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை. அ.சா.2 மருதகுமார் தேவேந்திர குல மக்கள் முன்னேற்ற கழகம் என்ற சாதிக்கட்சியின் மாவட்ட செயலாளர் என்றால் தெரியாது. பொதுவாக அரசியல் கட்சி மற்றும் சாதிக்கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் காவல்நிலையத்திற்கு வந்து செல்லும் வகையில் செல்வார்கள் என்பதால் அ.சா.2 மருதகுமார் தேவேந்திர குல மக்கள் முன்னேற்ற கழக கட்சியின் மாவட்ட செயலாளர்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.02 16:08:35 +0530

என்பது தெரியும் என்றும் நான் தெரிந்தே தெரியாது என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.2 மருதகுமார் மீது பல காவல்நிலையங்களில் சாதி சம்பந்தமாக தலையிட்டு பிரச்சனை செய்ததால் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் ஆவணங்களை பார்த்தால்தான் கூறமுடியும். அ.சா.2 மருதகுமார் பட்டியல் பழங்குடியினர் சட்டத்தை தவறாக பயன்படுத்தி வழக்கு பதிய வைத்து இழப்பீடு பெறுவதே வழக்கமாக கொண்டுள்ளார் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கு சம்பந்தமாக எந்த சாட்சிகளையும் நேரடியாக விசாரிக்கவில்லை என்றும் சார்பு ஆய்வாளர்தான் விசாரித்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் விசாரித்ததாக சொல்லப்படும் சாட்சிகள் அனைவரும் காவல்நிலையத்தில் வைத்து தட்டச்சு செய்யப்பட்ட வாக்குமூலம் பதிவு செய்துகொண்டேன் என்றால் சரில்ல. ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்துகொண்டேன் என்றால் சரியல்ல. பட்டியல் மற்றும் பழங்குடியினர் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள சட்ட காலத்திற்குள் நான் விசாரணையை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றும் காலதாமதமாகத்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு வயது முதிர்வின் காரணமாக சரியாக பேச முடியாது, நடக்க முடியாது என்றும் நான் முறையாக விசாரணை செய்திருந்தால் அந்த விவரம் எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. அ.சா.2 மருதகுமாருக்கு ஆதரவாக வழக்கு சார்பு ஆய்வாளரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை நான் முறையாக விசாரணை செய்யாமல் தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.02 16:08:38 +0530

Thiru. R. Saranraj,
Assistant Programmer,
Principal District Court,
Madurai.

Thiru. A. Mohamed Yasin,
Assistant,
PCR Court,
Ramanathapuram.

Co coordinator
Remote site

Deponent

Co coordinator
Court site

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.02 16:08:42 +0530